நேர்காணல்



# திராவிடர் பண்பாட்டு வாழ்வியல்

காட்டாறு

# திராவிடர் பண்பாட்டு வாழ்வியல்

## - நேர்காணல்கள் -

# பொருளடக்கம்


1.பெயர் சூட்டலில் புரட்சி

2.தங்கமும், கூந்தலும், அலங்காரமும் எனது அடையாளமல்ல! எனக்குப்பெருமையுமல்ல!!

3.காது குத்து - மூக்குக்குத்து - மொட்டை போடுதல் - பூப்புனித நீராட்டு விழாக்களைத் தவிர்த்தோர்

4.ஏற்பாடு செய்யப்பட்ட ஜாதி மறுப்புத் திருமணங்கள்

5.குழந்தைகளுக்கு மொட்டை அடிப்பதும், காதுகுத்துதலும் பயனற்றவை

6.பூப்புனித நீராட்டு விழாவின் அடிப்படை

7.காதல்: இணைவைப் போல பிரிவும் இயல்பானது

8.ஜாதி கடந்த வாழ்விணையர்

9.தாலியை அறுத்தெறியும் வேலையே முதல் வேலை!

10.ஒரு சுதந்திரப் பறவைபோல் இருக்கிறேன்

11.ஜாதியைக் காப்பாற்றும் "வளைகாப்பு - தாய்மாமன்சீர்" இந்து - கிறிஸ்தவச் சடங்குகளை மறுத்தோர்

12.வாஸ்து பார்க்காமல் வீடு கட்டி வென்றவர்கள்

13.இந்து மதத்தையும் மனுநீதியையும் பாதுகாக்கும் குலதெய்வங்களை ஒழிப்போம்!

14.லிவிங் டுகெதர் – கம்பேனியன்ஷிப்

15.ஜாதி - தாலி - சடங்குகள் - தேசிய இனம் கடந்த காதலர்கள்

16.இழப்பிலும், மகிழ்விலும் திராவிடர் பண்பாட்டைச் செயல்படுத்தும் இணையர்

17.தாலி அகற்றிய லிவிங் டுகெதெர் இணையர்

18.“ஜாதிமறுப்பு - மறுமணம் - லிவிங் டுகெதர் - தனிக்குடித்தனம் - பூர்வீகச் சொத்தில் பெண்களுக்கு உரிமை”

19.மனுசாஸ்திர எதிர்ப்பைச் சமையல் அறைகளிலிருந்து தொடங்க வேண்டும்!

20.ஜாதியைக் காக்கும் கிராமங்களை விட்டு வெளியேறிய லிவிங் டுகெதர் இணையர்

21.இறப்புச் சடங்குகளைப் புறக்கணித்தவர்

22.பல்லடத்தில் மரண ஆவணம் பதிவு செய்யப்பட்டது

23.திராவிடர் பண்பாட்டு உறுதிமொழி

பல்லடம் நாராயணமுர்த்தி, தீபா, திருப்பூர் வேணி, சுக்கம்பாளையம் வடிவேல் ஆகிய தோழர்கள் நடத்திய நேர்காணல்கள் காட்டாறு ஏட்டில் தொடர்ச்சியாக வெளியாயின. அவற்றின் தொகுப்பே இந்நூல்.

# 1. பெயர் சூட்டலில் புரட்சி

**'தோழர்ஈவெரா'**

பெயர் சூட்டலில் புரட்சி என்ற தலைப்பில், நாள் காட்டியில் இடம்பெற்றிருக்கும் தாராபுரம் தோழர் ஈ.வெ.ரா, தோழர்கள் கிருட்டிணகுமார் - சுமித்ரா இணையரின் மகள். நேர்காணலுக்குச் சென்றிருந்த போது தெளிவாகவும் அழுத்தமாகவும் பதிவு செய்தார் தோழர் ஈ.வெ.ரா....

"என் பெயர் தோழர் ஈ.வெ.ரா. நான் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 5ஆம் வகுப்பு படிக்கிறேன். எங்க ஸ்கூல்ல் டீச்சர் 'ஏன் இந்தப் பெயர வச்சிருக்க?' எனக் கேட்டார். "இது என் அப்பா வெச்ச பெயர்" என்றேன். "இது ஆண் பெயராச்சே இதை எப்படி வச்சீங்க?" என மிஸ் கேட்டதற்கு, "இது ஆண் பெயருமில்லை, பெண் பெயருமில்லை மிஸ், இந்தப் பெயர், மக்களுக்குக்காகப் பாடுபட்ட தலைவர், பெரியாரின் பெயர். அவரை எனக்கு மிகப் பிடிக்கும், அதனால் இந்த பெயர் எனக்குப் பிடிச்சிருக்கு" என்றார்.

பள்ளி நண்பர்கள் உங்கள எப்படிக் கூப்பிடுவாங்க? என்றதற்கு 'தோழர்' என கூப்பிடுவார்கள் என பதில் உடன் வந்தது.... 'தோழர் ஈ.வெ.ரா' வின் பெற்றோர் ஆசிரியர் சுமித்ரா - வழக்கறிஞர் குமார் இருவரிடம் எமது கேள்விகளைத் தொடர்ந்தோம்.

**இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்துச் சூட்டிய தலைவர்:**

காலத்துக்கேற்ப பெரியார் பண்பாட்டை தகவமைத்துக் கொள்ள வேண்டும். தலைவர்களிடம் சென்று பெயர் சூட்டுவது அல்லது பொதுக்கூட்டங்களில் பெயர் சூட்டுவது போன்ற

சடங்குகளையும் தவிர்க்க விரும்பினோம். இந்தப் பெயரை நாங்களே முடிவு செய்து நாங்களே அறிவித்துவிட்டோம்.

ஆரியப் பண்பாட்டுக்கு எதிரான திராவிடர் பண்பாட்டின் குறியீடாக நான் பெரியாரைப் பார்க்கிறேன். பெரியார் தனது ரஷ்யா பயணத்திற்குப் பிறகு அனைத்துத் தரப்பினரும் அவரை 'தோழர்' என அழைக்க வேண்டும் என விரும்பினார். 13. 11. 1932 குடி அரசு ஏட்டில்,

"இயக்கத் தோழர்களும் இயக்க அபிமானத் தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்வதிலும், பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும், ஒரே மாதிரியாக 'தோழர்' என்ற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகாஸ்ரீ, திரு, திருவாளர், தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீமத் என்பன போன்ற வார்த்தைகளைப் பேசவோ, எழுதவோ கூடாது என்றும் வணக்கமாய் வேண்டிக் கொள்கிறேன். 'குடி அரசிலும்' அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று ஒரு அறிவிப்பையே வெளியிட்டார். ஆகவே 'தோழர்ஈ.வெ.ரா' என்ற பெயரை வைத்தோம் என்றார்.

**இப்போது பெரியார் தொண்டர்களின் குடும்பங்களில் யாழ், யாழினி, யாழ்மொழி, பிரபாகரன், திலீபன், தமிழீழம், மதிவதனி என தமிழீழத்தைக் குறிக்கும் பெயர்களைச் சூட்டுவது தானே ட்ரெண்ட்?**

பெரியார் காலத்தில் அறிவியல் அடிப்படையிலும், கொள்கை அடிப்படையிலும் - வாலண்டினா, ரஷ்யா,

இராவணன், இரணியன், சமதர்மம், புரட்சிக்கொடி, அறிவுக்கொடி, தன்மானம், அன்பு, இந்திரஜித், அசோகன், சித்தார்த்தன், நாத்திகராணி, திராவிடராணி, பகுத்தறிவு என்பன போன்ற பல பெயர்களைச் சூட்டினார்கள்.

தி.மு.க. வளரத் தொடங்கிய காலத்தில் அறிவியல், கொள்கை அடிப்படைகள் மாறி, தமிழ் என்ற அடிப்படையில் பெயர்கள் சூட்டப்பட்டன. தற்போது ஈழப் பெயர்கள் சூட்டப்படுகின்றன. ஈழப் பெயர்கள் தான் இப்போதைய ட்ரெண்ட் என்பது உண்மைதான். ஜாதி, மத அடையாளங்கள் இல்லாமல் ஒரு நாட்டின் பெயரை, ஊரின் பெயரை அல்லது ஒரு பொருளின் பெயரை வைத்துக்கொள்வது நல்ல விசயம் தான்.

ஆனால் அந்தத் தமிழீழத்திற்கும், தமிழ்நாட்டுக்கும், இந்தியாவில் உள்ள அனைத்து தேசியஇன மக்களுக்கும் எதிராக இருப்பது ஆரியப் பண்பாடு. ஆரியப் பண்பாட்டின் அழிவில் தான் உண்மையான ஈழமோ, தமிழ்நாடோ உருவாக முடியும். அந்த ஆரியப் பண்பாட்டிற்கு எதிரான திராவிடர் பண்பாட்டுப் பெயர்களை மறக்காமல் இருப்பதே தற்போதை அவசியமான தேவை.

**- காட்டாறு, பிப்ரவரி 2016**

## என் பெயர் ‘கருந்திணை’

தோழர்கள் பல்லடம் சுமதி - கருப்புச்சாமி இணையர் பெரியாரியல் வாழ்வியலுக்குப் புதியவர்கள். கடந்த நான்கு ஆண்டுகளாக இக்கொள்கையைப் பின்பற்றி வாழ்ந்து வருகிறார்கள். காட்டாறின் தாக்கம் தோழர்களிடம்

எதிரொலித்ததின் விளைவாக, 2016 ஜனவர் 12 ம் நாள், தன் மகள் வைசியாவின் பத்தாவது பிறந்த நாளில் அவரது பெயரைக் `கருந்திணை' என மாற்றி அறிவித்தனர்.

நேர்காணலுக்கு அவரின் வீட்டுக்குச் சென்றிருந்த போது நான்கைந்து சிறுமிகளோடு கராத்தே பயிற்சி எடுத்து கொண்டிருந்தார் கருந்திணை...

"என் பெயர் கருந்திணை. இதுக்கு முன்னாடி `வைசியா' அப்படின்னு இருந்துச்சு. போன மாசம் என்னோட 10 வது பிறந்த நாளில் `கருந்திணை' அப்படினு என் பெயரை அப்பா, அம்மா, நண்பர்கள் முன்னாடி மாத்திட்டாங்க. எனக்கு வைசியா அப்படிங் கறதைவிடக் கருந்திணை தான் பிடிச்சிருக்கு என்றார். தோழர்கள் சுமதி - கருப்புச்சாமி ஆகியோரிடம் பேசினோம்.

**`கருந்திணை' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன?**

முதல்ல வச்சிருந்த வைசியா அப்படிங்கற பெயர் தமிழ் பெயருமில்லை, அர்த்தமற்றதாகவும் இருந்தது. அதனால் நாங்கள் பெரியாரியல் வாழ்வியலைப் பின்பற்றுவதாலும் எங்க வாழ்வில் ஒவ்வோர் நிகழ்விலும் அதன் தாக்கம் இருக்கவேண்டும் என்பதாலும் எங்கள் மகள் வைசியாவின் பெயரை கருந்திணை என மாற்றி வைத்தோம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பழந்தமிழர் பண்பாட்டில் இருந்த திணைகள் போல - கருந்திணை என்பது பெரியாரியல் பண்பாட்டு வாழ்வியலை தம் வாழ்விலும் செயல்படுத்தும் தோழர்களின் ஒருங்கிணைப்பு. ஆகவே `கருந்திணை' என்ற பெயரைச்

சூட்டுவது மகிழ்ச்சியே என்றார்.

**- காட்டாறு, பிப்ரவரி 2016**

## 2. தங்கமும் , கூந்தலும் , அலங்காரமும் எனது அடையாளமல்ல ! எனக்குப்பெருமையுமல்ல !!

**'மதுரை மகிழ்'**

பெண்கள் தங்களை அலங்காரப்படுத்திக்கொள்வதில் என்ன தேவை இருக்கிறது? பெண்கள் தங்களை அழகுபடுத்தி, அலங்காரப்படுத்திக்கொள்வதினால் அது யாருக்குப் பயன்படும்? பெண்கள் அழகுப்படுத்தப்பட்ட அலங்காரப் பொருளா என்ன? இந்த மாதிரியான கேள்விகளுக்கு பதில் அளிக்கிறார் மதுரை தோழர் மகிழ். அவரிடம் ஒரு நேர்காணல்.

என்னுடைய பெயர் மகிழ். அப்பா பாபுகண்ணன், அம்மா நிர்மலா, நாங்கள் மதுரையில் வசிக்கிறோம்.நான் மாகாத்மா பள்ளியில் 8ஆம் வகுப்பு படித்துக்கொண்டு இருக்கிறேன்.

**பெண்களுக்கு உரிய அடையாளங்களான ஆடை, அணிகலன், கூந்தல் இவைகளைத் தவிர்த்து வாழக் காரணம் என்ன?**

பெண்களுக்கு அடையாளங்கள் ஆடை, அணிகலன்களோ, கூந்தலோ இல்லை என்று நான் நினைக்கிறேன். பெண்கள் என்ன நகை மாட்டும் ஸ்டாண்டா? என்ற பெரியாரின் வரிகள் என் மனதைக் கவர்ந்தவை. இந்த சிந்தனையோடு நான் எப்படி சராசரி சமூகப் பெண்ணாக வாழமுடியும்? அதனால் தான் அனைத்து விசயங்களையும் சிந்தித்து நகை மாட்டும் ஸ்டாண்டாக நான் வாழ விரும்பவில்லை.

**பெண்கள் அணியும் உடைகளில் பாதுகாப்பான உடை எது? பாதுகாப்பற்ற உடை எது?**

முதலில் தாவணிபாவாடை, சேலை பற்றிப் பேசுவோம். ஒரு பெண் தன்னை தயார்படுத்தி வெளியில் செல்வதற்கு நேரமும் செலவாகிறது. அதுமட்டுமில்லாமல், ஆபத்தும், ஆபாசமும் நிறைந்த உடைகள் இவை இரண்டுதான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இரு சக்கர வாகனங்களில் செல்லும் போதும் பேருந்தில் பயணிக்கும் போதும் ஆடைகளைச் சரி செய்வதிலேயே தன்னுடைய கவனத்தைச் செலுத்தவேண்டியது அவசியமாகிறது.

எனவே இது ஒரு பாதுகாப்பற்ற உடைதான். சரியான உடை என்று சொல்ல வேண்டுமானால் ஆண்கள் அணிவது போல் பேண்ட், சர்ட், டி.சர்ட் அணிவதே சிறப்பானதும், பாதுகாப்பானதும் கூட. இப்படி அணிவதினால் நேரமும் வீணாவதில்லை. தேவையற்ற பொருட் செலவுகள் (உடைக்கு ஏற்றது போல் கம்மல், வளையல், பாசி) ஏதும் இல்லை.

**பெண்களுக்குக் கூந்தல்தான் அழகு என்கிறார்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஆண்களுக்குக் கூந்தல் இல்லை. ஆனால் அவர்கள் அழகாக இல்லையா? இப்போது எனக்கு கூந்தல் இல்லை. இப்படியிருப்பது எனக்கு மிகவும் சவுரியமாக இருக்கிறது. காலையில் சீக்கிரமாகவே பள்ளிக்குப் போக முடிகிறது. தினமும் தலைக்குக் குளிக்க முடிகிறது. ஆனால், என்னுடைய சக தோழிகள் பள்ளிக்குத் தாமத மாக வருவதற்குக் காரணமே அவர்களுடைய முடிதான். தலைசீவி, சடைபின்னி வருவதால் தாமதம் ஆகிவிட்டது என்று சொல்வார்கள்.

நான் எளிமையான தோற்றத்தில் (ழயசை உரவ) இருப்பதனால் எந்த ஒரு இடத்திற்குப்போகும் போதும் சீக்கிரமாகப் போக முடிகிறது. என்னுடைய பள்ளியில் 8000 பேர்

படிக்கிறார்கள். ஒரு போட்டிக்குத் தேர்வு செய்யும் போது முதல் வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறது. அதற்குக் காரணம் என்னுடைய Hair Cut.

அலங்கார அணிகலன்களைத் தவிர்த்ததால் இந்த விஷயத்தில் தைரியமாக இருக்கிற பெண் எல்லா விஷயங்களிலும் தைரியமாக இருப்பாள் என்று அவர்களுக்கே என்மேல் ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. நான் இப்படி இருப்பதால் எனக்கு முதல் வாய்ப்புதான் கிடைக்கிறது. எந்த இடத்திலும் இழிவு ஏற்பட வில்லை. அலங்காரத்தோடும், கூந்தலோடும் இருக்கிற பெண்களுக்குக்கூட 2 வது இடம்தான் கிடைக்கிறது. அதனால் ஒரு பெண்ணுக்கு முக்கியமானது அலங்காரமோ, அணிகலன்களோ இல்லை. பகுத்தறிவு சிந்தனைகள்தான்.

நான் கைப்பந்துப் போட்டியில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டேன் .வயது குறைவாக இருப்பதினால் விளையாட முடியவில்லை. அடுத்த ஆண்டு பெயர்ப் பட்டியலில் என்னுடைய பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.

கைப்பந்தாட்டத்திற்குத் தினமும் பயிற்சி எடுக்கும் போது என்னுடைய சக தோழிகள் தலைமுடி பிரிந்துவிட்டது, ரிப்பன் பிரிந்துவிட்டது என்று அதைச் சரிசெய்வதும், காதில் இருந்த கம்மல் காணாமல் போய்விட்டது என்று தேடுவதுமாக இருப்பார்கள். ஆனால், நான் கூந்தல், அணிகலன்களைத் தவிர்த்ததால் எனக்கு எந்த ஒரு பிரச்சனையும் இல்லை. விளையாட்டில் கவனமாக இருக்க முடிகிறது.

நாங்கள் விளையாடும்போது கூட பந்து காதில் பட்டு விடுமோ, என்று அலங்காரம் செய்து கொண்ட பெண்கள் அதைப் பாதுகாப்பதாகவே இருப்பார்கள். ஆனால், எனக்கு எந்த விதமான பிரச்சனையும் இல்லை.

முடி வளர்ப்பதால் நம் பெண் சமூகத்திற்கு முன்னேற்றம் முற்றிலும் தடைபடுகிறது. எப்படியெனில் ஒரு பெண் முடி வளர்க்கும் போது அதனை அலங்கரிக்க, தன்னுடைய நேரம் மட்டும் இல்லாமல் தன்னுடைய தாயின் நேரத்தையும் சேர்த்து செலவிடவேண்டியுள்ளது. இதனால் இரண்டு பேரின் நேரமும் வீணாகிறது. ஆகவே நாம் வளர்க்க வேண்டியது கூந்தல் அல்ல கல்வி. அறிவியல், பகுத்தறிவு இவைகளைத்தான் நாம் வளர்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

**அலங்காரம், அணிகலன்களைத் தவிர்த்தது உங்களின் விருப்பமா? பெற்றோரின் விருப்பமா?**

இது என்னுடைய விருப்பம்தான். நான் பெரியாரியல் புத்தகங்களை வாசிக்கும்போதும், கூட்டங்களுக்குப் போகும் போதும் ஆடை, அணிகலன், கூந்தல் இவைகளை ஏன் தவிர்க்கணும் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

என்னுடைய பெற்றோருடன் கலந்து உரையாடும்போதும் இவைகளைத் தவிர்ப்பதின் அவசியங்களை அறிந்தேன். ஒரு சில நிகழ்ச்சிகளுக்குப் போகும்போது கூட என்னுடைய பாட்டி, சித்தி இவர்கள் அனைவரும் நிறைய நகை அணிந்து கொண்டுதான் வருவார்கள். ஆனால், என்னுடைய அம்மா மிகவும் எளிமையான தோற்றத்தில்தான் வருவார். நான் என்னுடைய அம்மாவிடம் கேட்டேன் நீங்கள் மட்டும் ஏன் எளிமையான தோற்றத்தில் இருக்கிறீர்கள் என்று, அதற்கு

என்னுடைய அம்மா விளக்கம் கொடுத்தார். அப்போதுதான் நான் அடிமைத்தனம் இல்லாமல் இருக்கவேண்டும் என்று நினைத்தேன். அதனால் நான் என்னை மாற்றிக்கொண்டேன்.

**உங்களுடைய நண்பர்களோ இல்லை உறவினர்களோ, இந்த வாழ்க்கை முறையை எப்படிப் பார்க்கிறார்கள்?**

என்னுடைய உறவினர்கள் எதுக்கு இப்படி முடியை வெட்டி இருக்கிறாய்? முடி இருந்தால் உனக்கு அழகாக இருக்கும் என்று சொல்வார்கள். ஆனால், என்னுடைய பாட்டியே மற்றவர் களிடம் சொல்லும்போது என்னுடைய பேத்தி மாதிரி முடியை வெட்டி விடுங்கள். பள்ளிக்குச் செல்வதற்கும் காலையில் தலைக்கு குளிப்பதற்கும் வசதியாக இருக்கும் என்று சொல்வார்.

**ஒட்டு மொத்த பெண் சமூகமே வேறுவிதமான வாழ்வியலைக் கடைப்பிடிக்கும்போது உங்களுடைய மாற்றத்திற்கு என்ன நோக்கம்?**

பொதுவாகவே பெண்கள் என்றாலே எதுக்கு அதிகமாக படிக்க வைக்க வேண்டும்? எப்படியிருந்தாலும் திருமணம் முடிந்து வேறு வீட்டுக்கு போகிறவள் தானே? ஏதோ எழுத, படிக்கத் தெரிந்தால் போதும் அதிகப்படியான படிப்பைப் படிக்க வைத்துச் செலவு செய்யாமல் அந்தப் பணத்தை வைத்துத் திருமணம் செய்து வைத்துவிடலாம் என்று நினைப்பார்கள். இதுதான் பெண் களுடைய சாதாரணமான வாழ்க்கை. நான் இந்த வாழ்க்கை முறை யிலிருந்து வேறுபட்டு இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். கல்வி, விளையாட்டு போன்ற எல்லாவற்றிலும் கலந்து கொண்டு ஒரு பெண்ணாலேயும் இப்படி இருக்க முடியும் என்று காட்ட வேண்டும். ஒரு சராசரிப் பெண்ணாக இல்லாமல் ஒரு திறமைசாலி யாகவும், புத்திசாலியாகவும் தைரியமான

பெண்ணாக பெரியார் சொன்னதுபோல் வாழ வேண்டும் என்று நினைக்கிறேன்.

**திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிகளில் அலங்காரம் மற்றும் அழகுசாதனப் பொருட்களுக்காகவே பெண்கள் படைக்கப்பட்டதாக காட்டுகிறார்களே இதைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

ஒரு மாதத்திற்கு முன்பு `காளை' என்ற விலங்கினைக் காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலிலிருந்து நீக்க வேண்டும் என்று ஒரு போராட்டமே நடந்தது. ஆனால், பலநூற்றாண்டுகளாகப் பெண்கள் காட்சிப்படுத்தப்பட்ட பொருளாகத்தான் இருக்கிறார்கள். இதிலிருந்து இவர்கள் நீக்கப்பட்டாலே பெண் சமூகம் முன்னிலையில் இருக்கும்.

ஒரு விளம்பரத்தைப் பார்த்தால் அழகு கிரீம்கள், சோப்பு, பவுடர்கள் என்று பெண்களை மையப்படுத்தியே விளம்பரங்கள் எடுக்கப்படுகின்றன. சேவிங் கிரீம், வாசனைப் பொருட்கள் (ஶுயீசயல) இவைகளைப் பயன்படுத்தினாலே ஆண்கள் பின்னே பெண்கள் போகிறார்கள் என்று பெண்களை மிகவும் கேவலமாகச் சித்தரித்துக் காண்பிக்கிறார்கள். இப்படி ஓர் ஆணுக்கான விளம்பரத்தில்கூட பெண்கள்தான் வருகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். அப்போதுதான் பெண் சமுதாயம் முன்னேறும்.

**பொதுவாகவே பெண் என்றாலே ஒரு சின்னக் குண்டுமணி அளவாவது தங்கம் போட்டிருக்க வேண்டும் என்கிறார்களே!**

ஒரு பெண் வந்து ஒரு ஒலிம்பிக்கிலோஅல்லது மாநில அளவிலோ, மாவட்ட அளவிலோ ஒரு விளையாட்டுத்துறையில் சாதனை செய்து தங்கப்பதக்கம் வாங்கிக் கொண்டு

வரவேண்டும். அந்த மாதிரியான ஒரு குண்டுமணித்தங்கம் தான் வாங்க வேண்டுமே தவிர கழுத்து, காதுகளில் போடுவது தேவையற்றது என்று நினைக்கிறேன்.

**பெண்கள் விளையாட்டுத் துறையில் பின் தங்கியிருக்கக் காரணம் என்ன?**

அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று சொல்வார்கள். இப்படிப் படிப்பிலேயே மட்டம் தட்டும்போது அவர்களை விளையாட்டுத்துறைக்கு அனுமதிப்பது கிடையாது.

நான் L.K.G. படிக்கும் போது இருந்து 5 -ஆம் வகுப்பு படிக்கின்ற வரைக்கும் 10ஆண்கள், 10 பெண்கள் சேர்ந்து விளையாடுவோம். ஆனால், இப்பொழுது 10 பெண்களில் 9பேர் விளையாடுவதற்கு அவர்களுடைய வீடுகளில் அனுமதிப்பது கிடையாது.

பள்ளிக்குப் போவதும் பள்ளி முடிந்தவுடன் வீட்டிற்குள் முடங்கியிருப்பதுமாக இருக்கிறார்கள். ஆனால், எனக்கு இப்போது 13 வயது ஆகிறது. நான் இப்பவரைக்குமே எல்லா ஆண்களோடும் விளையாடிக்கொண்டுதான் இருக்கிறேன். இப்ப இருக்கிற பெண்குழந்தைகளை இப்படி வீட்டில் அடிமைப்படுத்தி வைத்திருப்பதால் இவர்கள் எப்படி விளையாட்டுத்துறையில் சாதிக்கமுடியும்? இந்தநிலைமாறவேண்டும். அப்போதுதான் இனிவரும் காலங்களில் பெண்களின் பங்கீடு அதிகமாக இருக்கும்.

**உங்களுடைய வாழ்க்கையின் லட்சியம் என்ன?**

ஒரு அலங்கார அணிகலன்களைப் போட்ட - கூந்தல் உடைய அடிமைப்பெண்ணாக இல்லாமல் ஒரு பகுத்தறிவுச்

சிந்தனையுள்ள ஒரு பெண்ணாக வாழ விரும்புகிறேன்.

என்னுடைய முதல் இலட்சியம் மாவட்ட ஆட்சியாளராக ஆகவேண்டும் என்பதே. அதாவது யாரும் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு ஒரு பெண்ணால் இப்படி இருக்க முடியுமா? என்று சிந்தனை கூடப் பண்ணமுடியாத ஆட்சியாளராக இருந்து சாதனை படைக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

## மகிழ் பெற்றோர்களிடம் கேள்விகள்

**இந்திய மற்றும் தமிழ்க் கலாச்சாரங்களில் பெண்கள் கூந்தல் வளர்ப்பதையும் நகை அணிவதையும் கொண்டாடும்போது நீங்கள் அதற்கு மாறாக உங்கள் மகளை வளர்க்க என்ன காரணம்?**

எங்களுடைய திருமணமே பெரியாரின் கொள்கைப்படி சுயமரியாதைத் திருமணம்தான். நாங்கள் பெரியாரின் வாழ்வியலை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். அதனால், எங்களுடைய குழந்தையை பெரியாரின் கொள்கைப்படி தான் வளர்க்கவேண்டும் என்று முடிவு செய்தோம். மனுசாஸ்திரம் பெண்களை மிகவும் இழிவாகக் கூறுகிறது. பெண்கள் படுக்கை, ஆசனம், அலங்காரங்களுக்கு ஆசைப்படுவார்கள். காம குரோதங் களுக்கு வசப்பட்டிருப்பார்கள். செய்யத் தகாததைச் செய்பவர் களாகவும் துரோக பாவத்தோடும் இருப்பார்கள் (அத்தியாயம் 8, சுலோகம்-17)இந்த மனுசாஸ்திரப்படி இல்லாமல் இந்து மத சாஸ்திரத்திற்கு எதிராகவும் - பகுத்தறிவு உடையவராகவும் எங்கள் மகளை வளர்க்க முடிவு செய்தோம்.

## Thank You for previewing this eBook

You can read the full version of this eBook in different formats:

- HTML (Free /Available to everyone)
- PDF / TXT (Available to V.I.P. members. Free Standard members can access up to 5 PDF/TXT eBooks per month each month)
- Epub & Mobipocket (Exclusive to V.I.P. members)

To download this full book, simply select the format you desire below

Free-Ebooks.net